எண்.8282/இசநி/கோ.1/2020
புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறை
மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம் (3வது மாடி)
பேட்டையான் சத்திரம், புதுச்சேரி - 605 009

---------

புதுச்சேரி நாள்:17.03.2020

# சுற்றறிக்கை

பொருள்: இநசி – கொரோனா வைரஸ் தொற்று – பரவாமல் தடுக்கும் வழிமுறைகள் - அறிவுறுத்தல் - சம்மந்தமாக.

பார்வை: புதுச்சேரி, சுகாதாரத்துறை இயக்குநர் அவர்களின் 05.03.2020-ஆம் தேதியிட்ட செய்திக்குறிப்பு.

****

மேலே பார்வையில் கண்டுள்ள செய்திக்குறிப்பின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மேற்கண்ட செய்திக்குறிப்பின் வழியாக புதுச்சேரி, சுகாதாரத்துறை இயக்குநர் அவர்கள் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க ஒருசில வழிமுறைகளை கையாளும்படி கூறியுள்ளார் அவற்றுள் ஒன்றாக அடிக்கடி சோப்பு கொண்டு கை கழுவுதல் மற்றும் பொதுமக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடுவதை தவிர்த்தல் ஆகியவைகளும் அடங்கும்.

3. திருக்கோயில்களை பொறுத்தவரை, பூஜை மற்றும் திருவிழாக்களில் மக்கள் /பக்தர்கள் ஒன்று கூடுவது வழக்கமாகும். இவ்வாறு ஓரிடத்தில் மக்கள் ஒன்று கூடுதல் தற்போது உள்ள சூழலில் தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். எனவே புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சி பரப்பில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில் நிர்வாகத்தினர் நிலமை சீராகும்வரை அதாவது கொரோனா வைரஸ் தொற்று கட்டுக்குள் வரும்வரை மக்கள் /பக்தர்கள் ஒன்று கூடும் வகையிலான திருவிழாக்கள் மறறும் பூஜைகள் இவைகளை முடிந்த அளவு தவிர்க்கும்படியும் மேலும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களின் உடல்நிலை பாதுகாப்பு கருத்தில் கொண்டு திருக்கோயில் வளாகத்தில் முடிந்த மட்டில் ஒன்றுகூடுவதை தவிர்க்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறது.

4. மேலும் பிரசாதம் வழங்குபவர் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் அடிக்கடி சோப்பு கொண்டு கை கழுவுதல் மற்றும் கொரோனா வைரஸ் குறித்து சுகாதாரத்துறை அறிவித்துள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் வளாகத்தை அவ்வப்போது தனிக் கவனம் செலுத்தி சுத்தப்படுத்துமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

5. இதனை மிக மிக அவசரம் என கருதவும்.

DEPT. OF HINDU RELIGIOUS INSTITUTIONS Pudurherry

//ஆணைப்படி//

(ஞா. சச்சிதானந்தம்)
ஆணையர்
இந்து சமய நிறுவனங்கள்

8/10

பெறுநர்:

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சி பரப்பில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்து திருக்கோயில் நிர்வாகத்தினர்.

நகல் பெறுநர்:

1. மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி/காரைக்கால்.
2. இயக்குநர் சுகாதாரத்துறை, புதுச்சேரி.
3. **துணை** மாவட்ட ஆட்சியர்(வருவாய்) (தெற்கு/வடக்கு) புதுச்சேரி/வில்லியனூர் /காரைக்கால்.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. செயலர் (இசநி), புதுச்சேரி.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச்செயலர், சட்டப்பேரவை வளாகம், புதுச்சேரி.

Scanned with CamScanner